1984 மார்ச் 7]

1982—83-ல் தனியார் போக்குவரத்துகளுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள்.

*124—(*வினா எண் 19214)*—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1982—83 ஆம் ஆண்டில் தமிழகத்தில் புதிதாகத் தனியார் போக்குவரத்துகளுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள் (வழித்தடங்கள்) எத்தனை (மாவட்டவாரியாக) ?

மாண்புமிகு திரு. சு. முத்துச்சாமி :

செங்கல்பட்டு	2
வடாற்காடு	5
தென்னாற்காடு	5
தர்மபுரி	4
புதுக்கோட்டை	6
கோயம்புத்தூர்	4
பெரியார்	4
மதுரை	5
மொத்தம்	35

இதர மாவட்டங்களில் உரிமங்கள் ஏதும் தனியாருக்கு வழங்கப்படவில்லை.

திரு. மு. அப்பாதுரை : தலைவரவர்களே, இந்த உரிமங்களில் ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள் எத்தனை என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துச்சாமி : தலைவரவர்களே, ஆதிதிராவிட மக்கள் என்று சொல்வதைவிட பின்தங்கியவர்கள் அதாவது தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக ஒருவர் மட்டும் விண்ணப்பம் செய்தார் ; அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமமுடைய அரசு படிப்படியாக போக்குவரத்துத் துறையில் அரசுடமையாக்குகின்ற கொள்கையை மேற்கொண்டிருக்கின்ற காரணத்தால், வரக்கூடிய காலங்களில் இப்படி தனியார்களுக்குக் கொடுக்காமல், அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துச்சாமி : தலைவர் அவர்களே அதை இன்னும் ஒரு மணி நேரத்தில் பேசி முடிவு எடுக்கலாம். அதற்கு முன்பாக ஒன்றைச் சொல்கிறேன். இதுவரைக்கும் தனியாருக்குக் கொடுக்கக் கூடாது என்று தான் முடிவு வைத்தி, ருக்கிறது. 35 வழித் தடங்களுக்கு அரசே நேரடியாக கொடுக்க வில்லை. நீதிமன்றத்தின் டைரக்ஷன் பேரில் கொடுக்கவேண் டிய நிர்பந்தம் அரசுக்கு ஏற்பட்டது.

திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, பஸ்கள் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்று 1973 ஆம் ஆண்டு சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டது. இந்த சட்டமுன்வடிவு வந்த பிறகு, 1973 முதல் 1977 வரை தனியார் களுக்கு பேருந்து உரிமங்கள் வழங்கப்பட்டனவா ? அப்படி யானால், எத்தனை உரிமங்கள் வழங்கப்பட்டன என்பதை அமைச் சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, வழங்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு என்பதை இப்போது உறுப்பினர் அவர்கள் கேட்க மாட்டார் என்று கருதுகிறேன். இந்த பில் வரும்போது நிச்சயமாக சொல்லயிருக்கிறேன்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் போக்குவரத்து உரிமங்கள் வழங்கப்படும் போது ஏதாவது நியதிகள் கடைபிடிக்கப்படுகின்றனவா ? குறிப் பிட்ட பிரிவினருக்குத்தான் கொடுக்கப்படுகின்றனவா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, உரிமங்கள் விதிகளின் பேரில் தான் வழங்கப்படுகின்றன. நிறைய விதிகள் கடைபிடிக்கப்பட்டு, அனுபவம், திறமை இவை களையெல்லாம் பார்த்துத்தான் செய்கிறோம். ஒரு குறிப் பிட்ட வகுப்பினருக்குத் தரப்படவில்லை என்றாலும், தாழ்த் தப்பட்ட மக்கள் முன்னேற வேண்டுமென்ற கொள்கையின் பேரில், எல்லாத் துறைகளிலும் 18 சதவீதம் தருவது போல் இந்தத் துறையிலும் 18 சதவீதம் அவர்களுக்குக் கொடுக்கப் படுகிறது. இவர்களுக்காக அரசாங்கம் அக்கறை காட்டிவருகி றது. எதிர்பார்த்த அளவிற்கு விண்ணப்பங்கள் வரவில்லை. வருகின்ற விண்ணப்பங்களுக்கு நாம் கொடுத்துக் கொண்டு வருகிறோம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தனி யார்களுக்கு பர்மிட் வழங்கப்படும் நேரத்தில், அரசு என்ன கையி டிங் பிரின்ஸ்சிபள்ஸ் கடைபிடிக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

1984 மார்ச் 7]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: நான் ஏற்கனவே சொன்னேன். அந்தப் பேருந்தை நடத்துவதில் அவர்களுடைய முன் அனுபவம், ஆர்வம் எப்படியிருக்கிறது என்பதைப் பார்த்துத் தான் தரப்படுகிறது. இதிலே இரண்டு, மூன்று முறைகள் இருக்கின்றன. நகர்ப்புற பேருந்து, புறநகர்ப் பேருந்து, ஷார்ட் ரூட் என்ற மூன்று வகையாக இருக்கின்றன. அவர்களுடைய அனுபவம் பார்த்து, நகர்ப்பேருந்து உரிமங்கள் கொடுக்கப்படுகின்றன. புற நகர்ப் பேருந்துகளைப் பொறுத்தவரையில், யார் யார் ஏற்கனவே செய்துகொண்டு வருகிறார்களோ, அவர்கள் தான் நடத்தமுடியும் என்ற நம்பிக்கையில் ஏற்கனவே தொழில் செய்பவர்களுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது.

40 கிலோ மீட்டருக்குக் குறைவாக இருப்பது 'ஷார்ட் ரூட்' என்று அழைக்கப்படும். அந்த அளவிற்கு யார் யார் விரும்பினாலும், புதிதாக இந்தத் தொழிலில் ஆர்வம் காட்டுகிறவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இன்னும் பல விதிமுறைகளைக் கடைபிடித்து வருகிறோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்திலே புதிதாக 5 உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த ஐந்தும் யார் யாருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா? அந்த உரிமங்களைப் பெறுவதற்கு நீதி மன்றத்திற்கு தாழ்த்தப்பட்டவர்கள் கூடச் சென்றார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தனித் தனியாக பெயர்கள் இப்போது என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் ஆர்வம் காட்டினால் யார் யாருக்கு கொடுக்கப்பட்டது என்பதை தெரிவிக்கிறேன். தாழ்த்தப்பட்டவர்கள் கூட நீதிமன்றத்திற்கு சென்று வந்தார்களா என்ற கேள்வியை வைத்தார்கள். எல்லா வகுப்பினரும் மனுக்களைப் போடுகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களும் போடுகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் மனு போட்டிருந்தால், அவர்களுக்கு நாம் கொடுத்துவிடுகிறோம். நீதிமன்றத்திற்குச் சென்றார்களா என்ற விவரங்கள் தற்போது இல்லை.